# தொழில் நுட்பக் கல்வித்துறை

அனுப்புநர்

ஆணையர்,
தொழில் நுட்பக் கல்வி இயக்ககம்,
கிண்டி, சென்னை–600 025

பெறுநர்

முதல்வர்கள்,
அனைத்து அரசு/அரசு
உதவிபெறும் மற்றும் சுயநிதி
பாலிடெக்னிக் கல்லூரிகள்

**கடிதஎண்.14515/ஐ–1/2024, நாள். 11.09.2024**

ஐயா/அம்மையீர்,

பொருள்; தொழில் நுட்பக்கல்வி – பலவகை தொழில் நுட்பக் கல்லூரிகள் – 2024–25–ஆம் கல்வியாண்டின், முதலாமாண்டு (First year) / / பகுதிநேரம் (Parttime) / நேரடி இரண்டாமண்டு (Lateral Entry) பட்டயப் படிப்பு – 2024–ஆம் ஆண்டு ITI முடித்த மாணவர்கள் (July–2024) – உயர்வுக்குப்படி நிகழ்வு–2024 – மாணாக்கர் சேர்க்கை – கால அவகாசம் நீட்டிப்பு – Web Portal–இல் பதிவேற்றம் செய்தல் – தொடர்பாக.

பார்வை:
1. இவ்வலுவலகக் கடித எண்.14515/ஐ–1/2024, நாள் 01.08.2024 மற்றும் 02.09.2024.
2. NCVT/SCVT (ITI) –2024 தேர்வு முடிவுகள்
3. சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை, தலைமைச் செயலாளர் அவர்களின் நேர்முகக் கடித எண்.2313/SDC–NM/2023, நாள் 28.08.2024 மற்றும் திருத்தப்பட்ட கால அட்டவணை

....

தொழில் நுட்பக்கல்வித்துறையின் கீழுள்ள, அனைத்து பலவகை தொழில் நுட்பக் கல்லூரிகளில், 2024–2025–ஆம் கல்வியாண்டின், நேரடி இரண்டாமாண்டு பட்டயப் படிப்பிற்கான மாணாக்கர் சேர்க்கைப் பதிவு 06.05.2024 முதல் 30.06.2024 வரையிலும், முதலாமாண்டு மற்றும் பகுதிநேர பட்டயப் படிப்பிற்கான மாணாக்கர் சேர்க்கைப்பதிபு 10.05.2024 முதல் 30.06.2024 வரையிலும், மேற்கொள்ளப்பட்டு, அந்தந்த கல்லூரிகளில் கலந்தாய்வு நடைபெற்று சேர்க்கை பெற்ற மாணாக்கர்களுக்கு 01.07.2024 முதல் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக, பார்வையில் காணும் இவ்வலுவலகக் கடிதங்களின் படி, பட்டயப் படிப்பில் மாணவர் சேர்க்கை விகிதத்தினை அதிகரிக்கும் வகையிலும், துணைப் பொதுத்தேர்வு எழுதிய மாணவர்களின் உயர்கல்வி நலன் கருதி பட்டயப்படிப்பில் வாயப்பளிக்கும் வகையிலும், 12–ஆம் வகுப்பு மற்றும் 10–ஆம் வகுப்பு துணை பொதுத்தேர்வு எழுதி வெற்றி பெற்றுள்ள மாணாக்கர்களை, நேரடி இரண்டாமாண்டு மற்றும் முதலாமாண்டு/பகுதிநேரப் பட்டயப் படிப்பில் சேர்க்கை செய்யும் பொருட்டு 14.08.2024 வரை சேர்க்கைக்கு அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, பட்டயப்படிப்பு பயில விரும்பும் அனைத்து மாணாக்கர்களுக்கும்

வாய்ப்பளிக்கும் வகையில், மாணாக்கர் சேர்க்கைக்கு 05.09.2024 மற்றும் 06.09.2024 ஆகிய இரண்டு நாட்கள், வரை நீட்டித்து அனுமதி வழங்கப்பட்டது.

ITI மாணவர்களுக்கான தேர்வு முடிவுகள் இந்த ஆண்டு (2024) SCVT தேர்வு முடிவுகள் 05.09.2024 அன்று வெளியாகியுள்ளது. மேலும் NCVT தேர்வு முடிவுகள் 15.09.2024 அன்று வெளியாகக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், பார்வை (3)-இல் காணும் தலைமைச் செலயாளர் அவர்களின் நேர்முகக் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, நான்முதல்வன் நடத்தும் உயர்வுக்குப் படி நிகழ்வு-2024 (Naan Mudhalvan – Uyarvukku Padi Event-2024) அனைத்து மாவட்டங்களிலும், திருத்தப்பட்ட அட்டவணைப்படி (Schedule of Naan Mudhalvan Uyarvukku Padi Event-2024) 09.09.2024 முதல் 27.09.2024 வரை நடைபெறவுள்ளது.

எனவே, இந்த ஆண்டு (2024) ITI தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு பட்டயப் படிப்பு பயில்வதற்கான வாய்ப்பினை வழங்கும் விதமாகவும், இம்மாணவர்களின் உயர்கல்வி நலன் கருதியும், நேரடி இரண்டாமாண்டில் மாணாக்கர் சேர்க்கையின் எண்ணிக்கையினை அதிகரிக்கும் வகையில், 2024-ஆம் ஆண்டு ITI தேர்ச்சி பெற்ற மாணாக்கர்களையும், நடப்பு கல்வியாண்டில் (2024-2025) பலவகை தொழில் நுட்பக் கல்லூரிகளில் நேரடி இரண்டாமாண்டு சேர்க்கைக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

மேலும், உயர்வுக்குப் படி நிகழ்வில் (Naan Mudhalvan-Uyarvukku Padi Event-2024) மாணாக்கர் சேர்க்கை நடைபெறும் (Spot Admission) என்பதைக் கருத்தில் கொண்டும், 27.09.2024 வரை, அனைத்து பாலிடெக்னிக் கல்லூரிகளிலும் மாணாக்கர் சேர்க்கைக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

சேர்க்கை விவரங்கள் மற்றும் சான்றிதழ்கள் 30.09.2024-க்குள் கட்டாயம் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

மேலும், மேற்படி சேர்க்கைக்கான கால அவகாசம் குறித்து பொதுமக்கள் மற்றும் பட்டயப்படிப்பு பயில விரும்பும் மாணவர்கள் அறிந்து கொள்ளும் வகையில், கல்லூரி முதல்வர்கள் நிலையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

11/9/24

தொழில் நுட்பக்கல்வி ஆணையருக்காக

11/9/24

நகல்:
கூடுதல் இயக்குநர் (தேர்வு) (மு.கூ.பொ.)
தொழில் நுட்பக்கல்வி இயக்ககம்,
சென்னை-600 025

- தகவலுக்காகவும், தக்க நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது